நல்லூர் பிரதேச நூலகம்
யாழ்ப்பாணம்
21-10-1992

பக்கங்கள்: நான்கு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

மலர் 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஐப்பசி 04 செவ்வாய்க்கிழமை (20-10-1992) UTHAYAN – A Lively National Tamil Daily கதிர் 327

# மன்னார் தாக்குதலில் பத்து படையினர் பலி!

## உயிலங்குளத்தில் நள்ளிரவு சம்பவம்

யாழ்ப்பாணம், அக்டோபர் 20

மன்னார் உயிலங்குளம் பகுதியில் நேற்று முன்தினம் நள்ளிரவு விடுதலைப் புலிகள் நடத்திய பெரும் அதிரடித் தாக்குதல் ஒன்றில் பத்துக்கும் அதிக படையினர் உயிரிழந்தனர். பெருமளவு ஆயுதங்களையும் விடுதலைப் புலிகள் கைப்பற்றினர்.

உயிலங்குளம் பகுதியில் உள்ள இராணுவத் தொடர் காவலரண்கள் மீதும், அதனை அண்டி இராணுவத்தினர் நிலை கொண்டிருந்த வீடுகள் மீதுமே நள்ளிரவு 11.55 மணியளவில் இத் தாக்குதல் நடத்தப்பட்டது.

சூரியகடடை காட்டுக்கும் இலந்தைமோட்டைக்கும் இடையில் அமைந்திருந்த இந்த இராணுவ நிலைகள் மீது புலிகள் அதிரடித் தாக்குதலை ஆரம்பித்தனர்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## அள்ளப்பட்ட ஆயுதங்கள்

யாழ்ப்பாணம், அக். 20

மன்னார் - உயிலங்குளம் காவலரண் மீது நேற்று நடத்திய அதிரடித் தாக்குதலின் போது விடுதலைப் புலிகள் கைப்பற்றிய ஆயுதங்கள் மற்றும் தளபாடங்களின் விவரம் வருமாறு:-

- ★ பி.கே. ரக இயந்திர துப்பாக்கி — 01
- ★ ஏ.கே எல்.எம் ஜி — 01
- ★ 60 மி. மீ. மோட்டர் — 01
- ★ ரி - 56 ரகத் துப்பாக்கிகள் — 08
- ★ ஜி - 3 ரகத் துப்பாக்கிகள் — 01
- ★ நடுத்தர ரவைகள் — 8,000
- ★ 60 மி. மீ. ஷெல்கள் — 12
- ★ 40 மி. மீ. ஷெல்கள் — 18
- ★ பி. கே. விநியோக ரவைகள் — 585
- ★ ரம் மகஸின் — 01
- ★ ஏ.கே எல்.எம். ஜி. விநியோக — 350
- ★ ஏ.கே. எல். எம் ஜி ஹோல்சர் — 01
- ★ ரி - 56 ரக மகஸின் — 47
- ★ ரி - 81 ரக மகஸின் — 08
- ★ ஜி - 3 மகஸின் — 01
- ★ ரி - 81 ரைபிள் கிரனேட் — 01
- ★ ஜே. ஆர். கைக்குண்டுகள் — 18
- ★ தொலைத் தொடர்பு சாதனம் — 01
- ★ செட் பற்றி — 02
- ★ செயின் கிரனேட் — 05
- ★ ஹெல்மெட் — 10
- ★ தண்ணீர் கான் — 20
- ★ தண்ணீர் கான் ஹோல்சர் — 19
- ★ இராணுவப் பட்டி — 14
- ★ இராணுவச் சப்பாத்து — 20சோடி

(4 ஆம் பக்கம் பார்க்க)

# மேலும் பல படையணிகளை வடக்கே அனுப்ப முடிவு!

## இந்த வாரம் துருப்புகள் நகர்வு

கொழும்பு, அக். 20

வடபகுதிக்கு மேலும் பல படையணிகளை (Battalions) அனுப்பி வைக்க அரசு முடிவு செய்துள்ளது. இந்த வாரத்தில் துருப்புகள் வடக்கு நோக்கி நகர்த்தப்படும்.

இராணுவ வட்டாரங்களை மேற்கோள் காட்டி "த ஐலண்ட்" நாளிதழும், "திவயின" சிங்கள நாளிதழும் இத்தகவலை வெளியிட்டுள்ளன.

தற்போது வடக்கில் உள்ள துருப்புகளுக்கு மேலதிகமாகவே புதிய படையணிகள் அனுப்பப்படுவதாக இரு பத்திரிகைகளும் குறிப்பிட்டன.

பாதுகாப்புக் காரணங்களுக்காக புதிதாக அனுப்பப்படும் படையினரின் எண்ணிக்கையை வெளியிடமுடியாதிருப்பதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன என்று 'திவயின' செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வடபகுதிப் போர்முனையில் நிலைகொண்டுள்ள படையினருடன் சேர்ந்து கொள்ள மேலும் பல படையணிகளை அனுப்பி வைக்கும் திட்டத்துக்கு இறுதி வடிவம் கொடுக்கும் நடவடிக்கையில் இராணுவத் தலைமைக் காரியாலயம் ஈடுபட்டுள்ளதாகவும் —

முதலாவது படையணி கொழும்பில் இருந்து அடுத்து வரும் வாரங்களில் அனுப்பி வைக்கப்படும் என்று இராணுவ வட்டாரங்கள் தெரிவித்ததாகவும் "ஐலண்ட்" செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

துருப்புக்களை அனுப்பும் திகதிகள் பற்றிய விவரங்களை இராணுவ வட்டாரங்கள் வெளியிடவில்லை என்றும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கு தளபதியாக தலுவத்த

# யாழ். தளபதியாக குலதுங்கா!

## ஞாயிறு முதல் நியமனம்

கொழும்பு, அக். 20

வடக்கில் இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் இராணுவத்தின் இரண்டாவது டிவிஷனின் தளபதியாக பிரிகேடியர் ஆர். எஸ். தலுவத்த நியமிக்கப்பட்டிருக்கிறார்.

அநுராதபுரத்தைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் இராணுவ அணிக்கு அவர் பொறுப்பதிகாரியாகச் செயற்படுவார்.

பிரிகேடியர் தலுவத்த இதற்கு முன்னர் யாழ். குடாநாட்டுக்கான இராணுவத் தளபதியாகப் பணிபுரிந்து வந்தார்.

இதுவரை காலமும் வடபகு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## படைகட்டமைப்பு மாற்றம்; 'கொப்பே' மரணம் காரணம்

### அமைச்சர் ரணில் தகவல்

கொழும்பு, அக். 20

அனுபவம் மிக்க இராணுவத் தளபதிகளான கொப்பேகடுவ, விஜய விமலரத்ன ஆகியோரின் மரணங்கள், மேஜர் ஜெனரல் ஜெரி டி சில்வாவின் பதவியுயர்வு ஆகியவையும் —

முப்படைகளும் பொலிஸாரும் மீண்டும் கூட்டுப்படைகள் கட்டளைப் பீடத்தின் கீழ் கொண்டுவரப்பட்டதற்குரிய காரணங்களில் சிலவாகும்.

அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க இத்தகவலை செய்தியாளரிடம் தெரிவித்தார்.

கடந்த ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் இராணுவத்துக்கு ஏற்பட்ட பின்னடைவும் படை கட்டமைப்பு மாற்றத்துக்குக் காரணம் — என்றும் அவர் கூறினார்.

ஓய்வு பெற்ற இராணுவ உயர்நிலை அதிகாரிகள் குழு ஒன்று கடந்த ஆகஸ்ட் செப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னார் ஆயர் திருநிலைப்படுத்தல்

யாழ்ப்பாணம், அக். 20

மன்னார் மறைவட்ட ஆயராக பேரருட் திரு. இராயப்பு யோசவ் ஞானானந்தர் அடிகளாரை திருநிலைப் படுத்தும் வைபவம் இன்று மடுத்திருப்பதியில் நடைபெறுகிறது.

(அ-51)

## பொலன்னறுவைக்கு பிரேமா விஜயம்

கடந்த வாரம் பொலன்னறுவை மாவட்டத்தில் படுகொலைகள் இடம்பெற்ற கிராமங்களுக்கு ஜனாதிபதி பிரேமதாஸவும் திருமதி ஹேமா பிரேமதாஸவும் நேற்று விஜயம் செய்தனர்.

(உ-11)

# முல்லைத்தீவிலும் கடும் சண்டை!

கொழும்பு, அக். 20

முல்லைத்தீவில் இராணுவ முகாம் ஒன்றின் முன்னணி காவல் அரண் ஒன்றின் மீது நேற்று விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியதாகவும் —

அங்கு படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே கடும் சண்டை நடைபெற்றதாகவும் செய்தி ஏஜென்ஸிகள் தெரிவித்தன. ஏற்பட்ட சேதங்கள் குறித்து விரிவான தகவல் ஏதும் கிடைக்கவில்லை.

இராணுவத் தரப்பில் சிப்பாய் ஒருவர் படுகாயமடைந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது.

(உ-எ-10)

## பொலன்னறுவையில் இரு பொலீஸார் காயம்

பொலன்னறுவை மாவட்டத்தில் உள்ள கிராமம் ஒன்றில் விடுதலைப் புலிகள் நடத்திய புதிய தாக்குதலில் இரு பொலீஸார் காயம் அடைந்தனர்.

இராணுவ அதிகாரிகளை மேற்கோள் காட்டி தாஸ கிழக்கு ஒலிபரப்புக் கழகம் இவ்வாறு அறிவித்தது.

முல்லைத்தீவில் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்திய சம்பவத்திற்கு இரண்டு மணி நேரம் முன்பதாக இத்தாக்குதல் இடம்பெற்றதாகவும் கூறப்பட்டது.

(உ-10)

## ஜி. சீ. ஈ. பரீட்சை வழக்கு ஜனவரியில் விசாரணை

கொழும்பு, அக். 20

1991 இல் வடபகுதியில் நடைபெற்ற ஜி. சீ. ஈ. (உயர் தரப்) பரீட்சையையும், நாட்டின் ஏனைய பகுதிகளில் 1990 ஏப்ரலில் நடைபெற்ற பரீட்சையையும் ஒன்றாகக் கணிக்க வேண்டும் எனக்கோரி உயர் நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணை ஜனவரி 13, 15 ஆம் திகதிகளில் நடைபெறவிருக்கின்றன.

இந்த மனு கடந்த 14 ஆம் திகதி நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்த மனுவுக்கு சட்டமா அதிபர் பதில் மனு தாக்கல் செய்ய நாளை (21 ஆம் திகதி) வரை கால அவகாசமும் —

பதில் மனுவுக்கு மனுதாரர் தரப்பு எழுத்து மூல பதிலை வழங்குவதற்கு அக்டோபர் 30 ஆம் திகதி வரையும் நீதி மன்றம் அனுமதி வழங்கியது.

மனு மீதான விசாரணையை ஜனவரி 13, 15 ஆம் திகதிகளில் நடத்துவது என்றும் நீதிமன்றம் தீர்மானித்தது.

(உ-3)

## 'குமண' கப்பலில் இன்று 750 தொன் சீனி வரும்

யாழ்ப்பாணம், அக். 20

இன்று காலை பருத்தித்துறைக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படும் "குமண" கப்பலில் உணவுப் பொருள்களுடன் 750 மெற்றிக் தொன் சீனியும் எடுத்துவரப்படுவதாகத் தெரியவருகிறது.

நிவாரண விநியோகத்துக்குத் தேவையான ஆயிரம் தொன் அரிசி, 50 தொன் மைசூர் பருப்பு, 2 மெற்றிக் தொன் தீப்பெட்டி மற்றும் கறிச்சரக்கு வகைகளும் இக் கப்பலில் எடுத்து வரப்படுகின்றன.

இக் கப்பலில் தனியாருக்கும், அரச திணைக்களங்களுக்குமே அதிக பொருள்கள் எடுத்து வரப்படுவது குறிப்பிடத்தக்கது.

யாழ். போதனா வைத்தியசாலைக்கு சுமார் ஆறு மெற்றிக் தொன் மருந்து வகைகள், டீசல், மண் எண்ணெய், பெற்றோல் ஆகியவையும் —

ஏனைய அரச வைத்தியசாலைகளுக்குத் தேவையான மருந்துவகைகள், மண் எண்ணெய் ஆகியவையும் —

யாழ். மாவட்ட ப. நோ. கூ. கூட்டுறவுச் சங்கங்கள் விவசாய மற்றும் கல்வித் திணைக்களங்கள், பல்கலைக்கழகம் ஆகியவற்றுக்குரிய பொருள்களும் "குமண" கப்பலில் எடுத்து வரப்படுகின்றன.

இக்கப்பலில் தபால் பொதிகள் ஏற்றப்பட்டிருக்கின்றனவா என்பது பற்றிய தகவல் நேற்றிரவு வரை யாழ்ப்பாணத்துக்குக் கிடைக்கவில்லை.

(உ-8 17-165)

## யாழ். நல்லூர், தீவக மக்களின் மீட்பு நிதி இன்று சேகரிப்பு

யாழ்ப்பாணம், அக் 20

உதவி அரசாங்க அதிபர் பிரிவு மட்டத்தில் தமிழீழ மீட்பு நிதி சேகரிக்கும் பணியில் இன்று செவ்வாய்க்கிழமை தீவகம் மற்றும் காரைநகர், யாழ்ப்பாணம்: நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களிடம் நிதி பெற்றுக்கொள்ளப்படும்.

வண்ணார் பண்ணையில் உள்ள யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியில் இன்று பி. ப 2.15 மணி தொடக்கம் பி. ப. 5 மணிவரை மக்கள் தமது மீட்பு நிதியைச் செலுத்தலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

## 5 ஆயிரம் பேரைக் கொண்ட எல்லைப் பாதுகாப்புப் படை

வடக்கு-கிழக்கு மாகாண எல்லைகளில் அமைந்துள்ள சிங்கள, முஸ்லிம் மக்களைப் பாதுகாப்பதற்கு ஐயாயிரம் பேரைக் கொண்ட தனியான எல்லைப்பாதுகாப்புப் படை ஒன்று வெகுவிரைவில் அமைக்கப்படவிருக்கிறது.

இந்தப்படையை அமைப்பதற்கு முன் உடனடிப்பாதுகாப்பு நடவடிக்கைகளைக் கருத்திற் கொண்டு, ஒவ்வொரு மாவட்டத்திலும் மேலதிகமாக இருக்கும் ஊர்காவல்படையினரை வடக்கு-கிழக்கு மாகாண கிராமப் பாதுகாப்புக்கு அனுப்பி வைப்பதற்கு பாதுகாப்பு அமைச்சு தீர்மானித்திருக்கின்றது.

கொழும்பு தமிழ்ப் பத்திரிகை ஒன்று இவ்வாறு செய்தி வெளியிட்டிருக்கிறது.

கண்டல் மரங்களைக் காத்திடுவோம்
கடல் அரிப்பைத் தடுத்திடுவோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

**செயல்நூல் ஆண்டு 3-11**

தரித மீட்டற் பயிற்சி பெறப் பெருந்துணை புரியும் தமிழ்மொழி செயல் நூல்கள். ஆசிரியர்கள்: மீட்டற் பயிற்சி வினாக்கள் ஆக்கும் சிரமத்தைக் குறைக்கும். மாணவர்கள் சுயமாகக் கற்று உச்சப் புள்ளிபெற உதவும். வெளியீடு: ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை, யாழ்ப்பாணம். (5384)

**தேவை**

வெற்று லக்ஸ்பிறே பை கொள்வனவு செய்யப்படுகிறது நியூ லங்கா பாம், கே. கே. எஸ் வீதி, இணுவில். உடன் தொடர்பு கொள்ளவும். (5501)

**சைவ தீட்சை**

யாழ். மத்திய கல்லூரி இந்து மாணவர் மன்றத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இந்து மாணவர்களுக்கு சைவ தீட்சை அளிக்கப்படும். (ந)

## விற்பனைக்கு

**UNION HAND PUMPS**

விற்பனைக்கு உண்டு.

**சாமுவேல் சன்ஸ் அன் கொம்பனி லிமிட்டெட்,**

206, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (இ- 3497)

## தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்

**யாழ். கல்விக் கோட்டம்**

### அறிவித்தல்

எமது ஒன்றியத்தின் அலுவலகம் "புதிய விஞ்ஞான கல்வி நிலையத்தில்" (எழிலகம் முன்பாக) 21-10-92 புதன்கிழமை முதல் இயங்கும். அலுவலகம் திங்கள், புதன், வெள்ளி ஆகிய நாட்களில் மாலை 3-00 மணி முதல் 6-00 மணி வரை திறந்திருக்கும் என்பதை சகல உறுப்பினர்களுக்கும் அறியத்தருகிறேன்.

சகல உறுப்பினர்களும் 31 - 10 - 1992 இற்கு முன்னர் சந்தாப் பணத்தை செலுத்துமாறும் வேண்டுகின்றேன்.

தலைவர்,
யாழ். கல்விக் கோட்டம்.

(இ-3707)

## சித்ராலயா யாழ்நகரில்

★ போட்டோஸ்ரற் பிரதிகள்
Photostat Copies
★ பாஸ்போர்ட் படங்கள்
Passport Photographs
★ தேசிய அடையாள அட்டைப் படங்கள் (அரச அங்கீகாரம் பெற்றவர்கள்)
National Identitity Card Photographers (Government Approved)
★ கறுப்பு வெள்ளைப் புகைப்படங்கள் வேண்டிய அளவுகளில் பெரிதாக்கல்
Black and White Photographs Enlargements
★ கலர்ப் புகைப்படங்கள் (உள்ளக வெளிப்புறங்கள் உட்பட)
Colour photographs (Indoor and outdoor)

போன்ற உங்கள் தேவைகளுக்கு என்றும்

### சித்ராலயா

172, ஸ்ரான்லி வீதி (அருச்சுனா வீதி),
யாழ்ப்பாணம். (இ/3592)

## கரைச்சிப் பிரதேச சபை

### 1993ஆம் ஆண்டுக்கான சந்தை இறைச்சிக் கடை

# கேள்வி அறிவித்தல்

01-01-1993ஆம் திகதி தொடக்கம் 31-12-1993ஆம் திகதி வரைக்கான காலப்பகுதிக்கு கீழ்க்குறிப்பிடப்பட்டிருக்கும் குத்தகைகள் சார்பில் கேள்விகள் 27-11-1992ஆம் திகதி நண்பகல் 12-00 மணிவரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும். கேள்விப் பத்திரங்கள் கரைச்சிப் பிரதேச சபை, கிளிநொச்சி அலுவலகத்தில் 20-11-1992ஆம் திகதி 12-00 மணிவரை கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையின் பிரகாரம் மீளளிக்கக் கூடிய கேள்வி வைப்புப் பணத்தையும், படிவக் கட்டணத்தையும் செலுத்துவதன் பேரில் வழங்கப்படும்.

கேள்விப் பத்திரங்கள் இணைப் பிரதிகளில் "விசேட ஆணையாளர், கரைச்சிப் பிரதேச சபை கிளிநொச்சி" என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிடப்பட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அல்லது அதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும். இது சம்பந்தமான நிபந்தனைகளையும், மேலதிக விபரங்களையும் அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

**அட்டவணை**

| குத்தகை விவரம் | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆக்க்குறைந்த கேள்வித் தொகை | கேள்வி வைப்புப் பணம் | படிவக் கட்டணம் |
|---|---|---|---|
| **கரைச்சிப் பிரதேச சபை கிளிநொச்சி உப அலுவலகம்** | | | |
| 1. கிளிநொச்சிச் சந்தை | 1,50,500/- | ரூ. 1,000/- | ரூ. 100/- |
| 2. பரந்தன் சந்தை | 20,000/- | ரூ. 500/- | ரூ. 50/- |
| 3. கிளிநொச்சி மாட்டிறைச்சிக் கடை | 1,00,250/- | ரூ. 1,000/- | ரூ. 100/- |
| 4. கிளிநொச்சி ஆட்டிறைச்சிக் கடை | 50,200/- | ரூ. 500/- | ரூ. 50/- |
| 5. பரந்தன் சந்தை மாட்டிறைச்சிக் கடை | 30,000/- | ரூ. 500/- | ரூ. 50/- |
| **முரசுமோட்டை உப அலுவலகம்:** | | | |
| 1. முரசுமோட்டைச் சந்தை | 3,200/- | ரூ. 100/- | ரூ. 50/- |
| 2. வட்டக்கச்சி சந்தை | 7,100/- | ரூ. 250/- | ரூ. 50/- |
| 3. டி 10 உருத்திரபுரம் சந்தை | 4,750/- | ரூ. 100/- | ரூ. 50/- |
| 4. டி. 8 உருத்திரபுரம் சந்தை | 1,250/- | ரூ. 100/- | ரூ. 50/- |
| 5. தருமபுரம் சந்தை | 900/- | ரூ. 100/- | ரூ. 25/- |
| 6. ஜெயந்தி நகர் சந்தை | 1,850/- | ரூ. 100/- | ரூ. 50/- |
| 7. ஸ்கந்தபுரம் சந்தை | 600/- | ரூ. 100/- | ரூ. 25/- |
| 8. கண்டாவளைச் சந்தை | 100/- | ரூ. 50/- | ரூ. 15/- |
| 9. ஆனைவிழுந்தான் சந்தை | 100/- | ரூ. 50/- | ரூ. 15/- |
| 10. இரணைமடுச் சந்தை | 1,000/- | ரூ. 100/- | ரூ. 50/- |
| 11. கனகபுரம் சந்தை | 7,100 | ரூ. 100/- | ரூ. 50/- |
| **மாட்டிறைச்சிக் கடைகள்:** | | | |
| 1. முரசுமோட்டை கடை இல. 1 | 1,700/- | ரூ. 100/- | ரூ. 50/- |
| 2. முரசுமோட்டை கடை இல. 2 | 1,750/- | ரூ. 100/- | ரூ. 50/- |
| 3. டி. 10 உருத்திபுரம் | 1,750/- | ரூ. 100/- | ரூ. 50/- |
| 4. வட்டக்கச்சி சந்தை | 13,750/- | ரூ. 500/- | ரூ. 50/- |
| 5. டி. 8 உருத்திரபுரம் | 4,500/- | ரூ. 100/- | ரூ. 50/- |
| 6. கனகபுரம் | 5,200/- | ரூ. 250/- | ரூ. 50/- |
| 7. திருநகர் | 3,500/- | ரூ. 100/- | ரூ. 50/- |
| 8. ஸ்கந்தபுரம் | 1,100/- | ரூ. 100/- | ரூ. 50/- |
| 9. தருமபுரம் | 5,100/- | ரூ. 250/- | ரூ. 50/- |
| 10. ஆனைவிழுந்தான் | 1,000/- | ரூ. 100/- | ரூ. 25/- |
| 11. சேவியர் வீதி | 5 000/- | ரூ. 100/- | ரூ. 50/- |
| 12. இரணைமடுச் சந்தி | 10,000/- | ரூ. 100/- | ரூ. 50/- |
| 13. லக்சபான மா. இ. கடை | 3,000/- | ரூ. 100/- | ரூ. 50/- |
| 14. கோவிந்தன் கடை | 5,250/- | ரூ. 100/- | ரூ. 50/- |
| **ஆட்டிறைச்சிக் கடை** | | | |
| 1. டி. 10 உருத்திரபுரம் | 2,200/- | ரூ. 100/- | ரூ. 50/- |
| 2. கனகபுரம் ஆட்டிறைச்சி | 3,100/- | ரூ. 100/- | ரூ. 50/- |
| 3. ஸ்கந்தபுரம் ” | 3,100/- | ரூ. 100/- | ரூ. 50/- |
| 4. வட்டக்கச்சி ” | 5 200/- | ரூ. 100/- | ரூ. 50/- |
| 5. சேவியர் வீதி ” | 1,000/- | ரூ. 100/- | ரூ. 50/- |
| 6. இரணைமடுச் சந்தி ” | 1,000/- | ரூ. 100/- | ரூ. 50/- |

செல்வி நா. இந்துமதி,
விசேட ஆணையாளர்,

கரைச்சிப் பிரதேச சபை,
கிளிநொச்சி.

(இ-3498)

## கரைச்சிப் பிரதேச சபை, கிளிநொச்சி

# கேள்வி அறிவித்தல்

### இரத்தினபுரம் வீதி திருத்த வேலை பகுதி - 1,2.

மேற்படி வீதி திருத்த வேலைக்கான கேள்விகள் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரரிடமிருந்து கோரப்படுகின்றது. ஒப்பந்தகாரர் எமது அலுவலகத்தில் மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்புப் பணம் ரூ. 500/-ம், மீளளிக்க முடியாத கேள்விப் பத்திரப் பணம் ரூ 250/-ம் செலுத்துவதன் பேரில் 02 11-1992 ஆம் திகதி நண்பகல் 12-00 மணி வரை வழங்கப்படும்.

கேள்விப் படிவங்கள் பகுதி 1, 2ற்கு தனித்தனியாக வழங்கப்படும். ஒவ்வொரு பகுதி வேலைக்கும் தனித்தனியாக வைப்புப் பணம், கேள்விப் பத்திரப் பணம் மேலே குறிப்பிட்டவாறு செலுத்திப் பெறப்படல் வேண்டும்.

கேள்விப் பத்திரங்கள் முறைப்படி பூரணப்படுத்தி 06-11-1992 ஆம் திகதி நண்பகல் 12-00 மணிக்கு முன்பு எமது அலுவலகத்தில் கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபால் மூலமோ அல்லது அதற்கென பிரத்தியேகமாக எமது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியிலோ இடப்படல் வேண்டும்.

கேள்விப் பத்திரங்கள் கொண்ட கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "இரத்தினபுரம் வீதி திருத்த வேலைக்கான கேள்விப் பகுதி 1/2.1992" என எழுதப்பட்டு "விசேட ஆணையாளர், கரைச்சிப் பிரதேச சபை, கிளிநொச்சி" என விலாசமிடப்படல் வேண்டும்.

இது சம்பந்தமான மேலதிக விபரங்களை அலுவலக நாளில், அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

செல்வி நா. இந்துமதி,
விசேட ஆணையாளர்,

கரைச்சிப் பிரதேச சபை,
கிளிநொச்சி.

(இ-3499)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்: 29 — 08 — 1914



மறைவு: 21 — 09 — 1992

### திருமதி அன்னம்மா காசிலிங்கம்

**திதி: 21 — 10 — 1992**

அன்பின் திருவாய், பண்பின் உறைவிடமாய், பாச விளக்காய், பலரும் மதிக்க வாழ்ந்திட்ட அன்புத் தெய்வமே! எமது அருமைத் தாயே! எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டு எங்குதான் சென்றீர்கள்?

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நாளை (21-10-1992) புதன்கிழமை எமது இல்லத்தில் காலை 10 மணி தொடக்கம் நடைபெறும் சபிண்டீகரணக் கிரியைகளிலும், பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு உறவினர்களையும், நண்பர்களையும் அன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்:

மகள்: சந்திரா.
மருமகன்: புஸ்பநாதன்,
பேரப்பிள்ளைகள்.

இருபாலை,
கோப்பாய்.

(22952)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### இரு பக்கங்களிலும் செலவு தேவையா?

இவ்வருட மத்தியில் வலிகாமம் வடக்கில் அரசாங்க விமானப்படையினர் நடத்திய அக்கிரமமான குண்டு வீச்சில் சேதமடைந்த கிராம முன்னேற்றச் சங்கக் கட்டடத்துக்கு, நஷ்டஈடு வழங்குவது குறித்து உரிய கவனம் எடுக்கப்படும் என்று அரசாங்கம் அறிவித்திருக்கிறது.

சமூக நலன், புனர்வாழ்வு புனர்நிர்மாண அமைச்சின் செயலாளர் கிறிஸ்ரி சில்வா, மல்லாகம் கிராம முன்னேற்றச் சங்கத் தலைவருக்கு எழுதிய கடிதத்தில் இதனைத் தெரியப்படுத்தி உள்ளார்.

கடிதம் நம்பிக்கையூட்டும் மொழி நடையில் எழுதப்பட்டிருந்தாலும், நஷ்ட ஈடு கிடைக்குமா? அவ்வாறாயின் எப்போது என்பனவெல்லாம் இரண்டாம் வகைக் கேள்விகள்.

ஆனால் அரசே சேதப்படுத்திய உடைமைகளுக்கு, அரசு நஷ்டஈடு வழங்க இணங்குகிறது என்பதே இங்கு கவனத்தில் எடுக்கப்பட வேண்டிய ஒன்றாகும். அரசு என்ன, தனிநபர்தானும் பிறன் ஒருவனுடைய உடைமைகளைச் சேதப்படுத்தும் போது, அவற்றுக்கு நஷ்ட ஈடு வழங்கித் தான் ஆக வேண்டும். அது பொதுவிதி மட்டுமல்ல சட்டத் தேவையுமாகும். ஆகவே அரசாங்கம் தான் சேதப்படுத்திய தமிழர் சொத்துக்களுக்கு எல்லாம் நஷ்டஈடு வழங்கியே ஆக வேண்டும்.

விமானப்படை குண்டு வீச்சால் அழித்த கிராம முன்னேற்றச் சங்கக் கட்டடச் சேதத்துக்கு அரசு நஷ்ட ஈடுவழங்கியே ஆகவேண்டும். அது குறித்து உரிய கவனம் செலுத்தப்படும் என்று வெறுமனே புனர் வாழ்வுத்துறை அமைச்சின் செயலாளர் கடிதம் எழுதியது ஒவ்வாததாகும்.

அரசாங்கம் என்ற பெயரில் ஒரு பிரசையின், அதாவது தனி மனிதனின் உடைமையை நாசமாக்குவதற்கு அரசுக்கு உரிமை இல்லை. போரின் போது நடந்தது என்பதால் அதிலிருந்து விதிவிலக்கும் பெறும் அருகதையும் அரசுக்குச் சட்டப்படி இல்லை.

எனவே தமிழ்ப் பகுதிகளில் அரசாங்கப் படைகள் ஏற்படுத்திய அழிவுகளுக்கு எல்லாம் அரசாங்கம் நஷ்ட ஈடு கொடுத்தே தீரவேண்டும். இந்த வகையில் 83ஆம் ஆண்டு தொடக்கம் 89ஆம் ஆண்டு வரை தமிழர்களுக்கு அரச படைகளாலும், இந்தியப் படைகளாலும் ஏற்படுத்தப்பட்ட அழிவுகள், சேதங்களுக்கு நஷ்ட ஈடு சரிவரக் கொடுக்கப்படவில்லை.

அவை தவிர கடந்த இரண்டரை வருடங்களாக அரசுப் படைகள் உண்டாக்கிய அழிவுகள் மிகப் பலமடங்காகும்; ஈடு செய்ய முடியாதனவாகும்.

உடைமைகளுக்கு நஷ்டஈடு வழங்குவது என்பது அரசுக்குப் பெருந்தொகைப் பணச் செலவை உண்டாக்கப் போகிறது. இதற்கான பணச் செலவையும், யுத்தத்துக்கான செலவையும் இரு பக்கங்களாலும் செலவிட்டுக் கண்டது என்ன? ஆக்கத்துக்குப் பதில் அழிவு தான்! யுத்தத்தை நிறுத்தினால் நஷ்ட ஈடும் கொடுக்க நேரிடாது.

இது குறித்துச் சிந்திக்காமல் அரசாங்கத் தலைவர்கள் யுத்தத்தைத் தொடர்வதில் அக்கறை காட்டுவது வீம்புக்காகவா? தமிழர்களின் சொத்துகளை மட்டுமல்ல அவர்களையே அழித்து விடுவோம் என்ற தீர்மானத்தினாலா?

தமிழர்களுக்கு நேர்ந்த உயிர்ச் சேதத்துடன் உடைமைச் சேதங்களை ஒப்பிடும் போது முன்னையதே பாதிப்புக் கூடியதுமாகும்; பாரம் அதிகமானதாகும்.

எந்தளவு அதிக செலவிலும் தமிழர்களை அழித்து விடுவது என்ற தீர்மானம் இல்லாவிட்டால், அரசு யுத்தத்தை தொடரமாட்டாது மக்கள் குடியிருப்புகள் மீது குண்டு வீச்சு நடத்துவது போன்ற அட்டூழியங்களை அனர்த்தங்களைப் புரியவும் மாட்டாது.

ஸ்ரீலங்கா அரசின் செயல்கள் அதன் நோக்கத்தைப் புலப்படுத்தப் போதுமானவையாகும்.

# அதிகாரப் பரவலாக்கலை வலுப்படுத்த மேற்சபை

## தெரிவுக்குழு உறுப்பினர்கள் பரிசீலனை

கொழும்பு, அக். 20

50 உறுப்பினர்கள் கொண்ட மேல்சபை ஒன்றை நிறுவும் யோசனைகள் அடங்கிய ஆவணம் ஒன்றை நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் தலைவரான மங்கள முனசிங்க அக்குழுவின் அங்கத்தவர்களின் பரிசீலனைக்கு சமர்ப்பித்துள்ளார் என கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

இனப் பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்கில் அதிகாரப் பரவலாக்கல் திட்டம் ஒன்று வகுக்கப்படுமிடத்து, அந்த அதிகாரப் பரவலாக்கலை வலுப்படுத்துவதும் —

மத்திக்கும், மாகாணங்களுக்கும் இடையேயான தொடர்புகளை மேம்படுத்துவதுமே மேல்சபை அமைக்கப்படுவதற்கான நோக்கம் என்று தெரிவிக்கப்பட்டது.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் தலைவரால் அதன் அங்கத்தவர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இந்த ஆவணத்தின் பிரகாரம் நாடாளுமன்றத்தின் ஓர் அங்கமாக இயங்கும் மேல்சபை 50 உறுப்பினர்களைக் கொண்டதாக இருக்கும். ஒவ்வொரு மாகாணமும் இந்த சபைக்கு மூன்று உறுப்பினர்களைத் தெரிவு செய்யும். மாகாண ரீதியாக நடைபெறும் தேர்தல் மூலம் இந்த உறுப்பினர்கள் தெரிவாகலாம்.

எஞ்சிய 23 ஆசனங்களுக்கான உறுப்பினர்கள் அரசியல் கட்சிகளினால் நியமிக்கப்படுவர்.

நாடாளுமன்றத்தின் கீழ் சபையில் உள்ள அரசியல் கட்சிகளின் உறுப்பினர்களின் விகிதாசார அடிப்படையில் இந்த நியமனம் இடம்பெறும்.

ஏனைய ஆசனங்கள் நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சிகளின் ஆலோசனைகளைப் பெற்று தொழில்சார் நிபுணர்கள், கல்விமான்கள் மற்றும் அபிவிருத்தி நிபுணர்கள் ஆகியோரில் இருந்து நிரப்பப்படும்.

அதே சமயம், மத்திய அரசுக்கும், மாகாணத்துக்கும் இடையிலான உறவுகளுடன் தொடர்புபட்ட விவகாரங்களில் ஒருங்கிணைப்புப் பணிகளைச் செய்யவும் —

மத்தியஸ்தம் வகிக்கவும் —

அதிகாரப் பரவலாக்கல் ஆணைக்குழு ஒன்றை அமைக்கவும், தெரிவுக்குழு உறுப்பினர்களுக்கு வழங்கிய ஆவணத்தில் திரு. மங்கள முனசிங்காவினால் யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மத்திய அரசாங்கத்தினாலும், மாகாண சபைகளினாலும் நியமிக்கப்படக் கூடிய உறுப்பினர்களைக் கொண்ட சுயாதீனமான நிதி ஆணைக்குழு ஒன்றை அமைப்பதற்கான யோசனையும் இதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. (இ)

## மீண்டும் மாங்குளத்தில் இயங்குகின்றது

வடமராட்சி, அக். 20

மாங்குளத்தில் முன்னர் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளின் போது ஒலுமடுவுக்கு இடம் மாற்றப்பட்ட மாங்குளம் கிராமிய வைத்தியசாலை மீண்டும் மாங்குளத்தில் ஐந்து வீட்டுத் திட்டத்தில் இயங்குகின்றது.

இதேவேளை —

வவுனிக்குளத்திற்கு இடம் மாற்றப்பட்ட மாங்குளம் மக்கள் வங்கிக்கிளை எதிர்வரும் முதலாம் திகதி முதல் மாங்குளத்தில் இயங்க வைக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (த-165)

## மட்டக்களப்பில் விசேட அடையாள அட்டை

கொழும்பு, அக். 20

மட்டக்களப்பு நகரில் வசிக்கும் 15 வயதுக்கு மேற்பட்டோருக்கு பாதுகாப்புப் படையினர் விசேட அடையாள அட்டைகளை வழங்கி வருகின்றனர்.

மட்டக்களப்பு மாவட்ட பாதுகாப்பு இணைப்பதிகாரி, உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோர் அடையாள அட்டையில் கையெழுத்திட்டுள்ளனர். (இ)

## அரச ஊழியருக்கு சம்பள உயர்வு?

கொழும்பு, அக். 20

அரச ஊழியரின் வாழ்க்கைச் செலவை ஈடுசெய்யும் வண்ணம் எதிர்வரும் வரவு செலவுத் திட்டத்தில் சம்பள உயர்வு அறிவிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அதிகரித்துவரும் வாழ்க்கைச் செலவினால் அரச ஊழியர் அனுபவிக்கும் இன்னல்கள் பற்றி தொழிற்சங்கங்கள் ஏற்கனவே அரசின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளன என்றும் —

அந்த அடிப்படையிலேதான் சம்பள உயர்வு ஒன்றை அரசாங்கம் வரவுசெலவுத் திட்டத்தில் அறிவிக்கலாம் என்று பரவலாக எதிர்பார்க்கப்படுகிறது என்று அரசுக் கட்டுப்பாட்டில் உள்ள கொழும்புப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

1993ஆம் ஆண்டுக்கான உத்தேச வரவுசெலவுத் திட்டம் எதிர்வரும் நவம்பர் மாதம் 6ஆம் திகதி நாடாளுமன்றத்தில் பிரதமரும் நிதி அமைச்சருமான திரு. டி. பி. விஜேதுங்காவினால் சமர்ப்பிக்கப்பட இருப்பது தெரிந்ததே. (த-எ)

## தாயகம் திரும்புவோருக்கு வசதிசெய்யப் பாரிய திட்டம்

கொழும்பு, அக். 20

தென்னிந்தியாவில் இருந்து தாயகம் திரும்பும் இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு இருப்பிட வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான பாரிய திட்டம் ஒன்றை ஐ. நாவின் அகதிகளுக்கான அலுவலகத்தின் ஒத்துழைப்புடன் புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் சமூக நலத்துறை அமைச்சு ஆரம்பித்துள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தத் திட்டத்தின் கீழ் நாட்டின் பல பகுதிகளில ஐ. நா. அமைப்பின் நிவாரணங்களுக்கு ஏற்ப, அகதி முகாம்கள் ஏற்படுத்தப்படும் என்று புனர்வாழ்வு அதிகார சபையின் தலைவர் திலக் சந்திரசேகரா தெரிவித்தார்.

வன்னியில் மூவாயிரம் பேர் தங்கக்கூடிய ஒரு முகாமும் திருகோணமலையில் ஆயிரம் பேர் தங்கக்கூடிய ஒரு முகாமும் முதலில் அமைக்கப்படும்.

தமிழகத்தில் இருந்து அடுத்த தொகுதி அகதிகளை திருப்பி அனுப்பி வைப்பது பற்றி இந்திய அதிகாரிகள் விரைவில் அறிவிப்பார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## ஆஸ்திரேலிய பிரதித் தூதர் வவுனியாவுக்கு விஜயம்

கொழும்பு, அக். 20

கொழும்பில் உள்ள அவுஸ்திரேலிய பிரதித் தூதர் கடந்த சனிக்கிழமை வவுனியாவுக்கு விஜயம் செய்தார்.

வன்னி இராணுவ இணைப்பு அதிகாரியையும் சிவில் நடவடிக்கை தொடர்பு அதிகாரிகளையும் அவர் சந்தித்து, வவுனியா நிலைவரம் பற்றி ஆராய்ந்தார்.

ஆஸ்திரேலிய பிரதித்தூதர் பின்னர் வவுனியா அரச அதிபர் திரு. தில்லைநடராசாவையும் சந்தித்துப் பேசினார் என்று தெரிவிக்கப்படுகிறது. (த-எ)

## வடமராட்சியில் பனம் விதை நடுகை

யாழ்ப்பாணம், அக். 20

வடமராட்சி கரவெட்டி வட்டவை பகுதியில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தின் காடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் ஆயிரத்து 450 பனம் விதைகள் அண்மையில் நடுகை செய்யப்பட்டன.

இந்நிகழ்ச்சியில் கிராமிய உற்பத்திக்குழு உறுப்பினர்களும், பொதுமக்களும் கலந்து கொண்டனர். விதைகள் அனைத்தும் வல்லை வெளியில் உள்ள முனியப்பர் ஆலய சுற்றாடலில் இருந்து பருத்தித்துறை - யாழ். வீதியில் அமைந்துள்ள வல்லை சந்தி வரைக்குமான நிலப்பரப்பிலேயே நாட்டப்பட்டன. (த)

## பொறியியல் மாணவர் மீது பேராதனையில் தாக்குதல்

கொழும்பு, அக். 20

பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல்பீடத்தைச் சேர்ந்த தமிழ் மாணவர்கள் இருவர் இனந் தெரியாதோரால் தாக்கப்பட்டுள்ளனர்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் அக்பர் மண்டபத்துக்குள் இச் சம்பவம் இடம் பெற்றது.

சம்பவ தினம் அதிகாலை 2.45 மணி அளவில் முகத்தை துணியினால் மூடியபடி அக்பர் மண்டபத்துக்குள் நுழைந்த சிலர் மின் விளக்குகளை அணைத்துவிட்டு இத் தாக்குதலை நடத்தியதாக பேராதனை பல்கலைக்கழக பீடாதிபதியிடம் முறையிடப்பட்டுள்ளது. (இ)

# சுதந்திரக் கட்சிக்குள் மற்றொரு அணியும் உதயம்?

## 'ஜன உறுமய' அதன் பெயராம்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் சிறிமாவோ பண்டார நாயக்காவுக்கு சார்பான அணியையோ அன்றி அநுரா பண்டார நாயக்காவுக்கு சார்பான அணியையோ சாராமல் நடுநிலையாக இயங்கும் எம். பிக்கள் ஒன்றிணைந்து "ஜன உறுமய" (மக்கள் உரிமை) என்ற பெயரிலான புதிய அமைப்பொன்றை அமைக்க உத்தேசித்துள்ளனர்.

கொழும்புப் பத்திரிகை ஒன்று இச் செய்தியை வெளியிட்டுள்ளது.

நாடாளுமன்ற எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான காலி மாவட்ட எம். பி. ரிச்சர்ட் பத்திரன தலைமையில் இயங்கவிருக்கும் "ஜன உறுமய"வில் 87 எம். பிக்கள் இணைவார்கள் என்று சுதந்திரக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த அமைப்பு சுதந்திரக் கட்சி எம். பிக்களை மட்டும் கொண்டதாக அமையாது. ஏனைய கட்சிகளைச் சேர்ந்தவர்களும் இதில் இணைந்து கொள்ளலாம் என்றும் —

சுதந்திரக் கட்சியில் நிலவும் உள்வீட்டு சண்டையில் தாங்கள் எந்தப் பிரிவினரையும் ஆதரிக்கவும் இல்லை எதிர்க்கவும் இல்லை என்றும் இவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

ஜனாதிபதி ஆட்சி முறையை மாற்றி, நாடாளுமன்றத்திற்கு கூடுதலான அதிகாரங்களுடன் கூடிய அரசமைப்பை ஏற்படுத்தல், வடக்கு கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வு காணுதல் உட்பட 8 கோரிக்கைகளை 'ஜன உறுமய' வினர் சுதந்திரக் கட்சியின் எதிர்கால ஜனாதிபதி வேட்பாளரிடம் முன் வைக்க உள்ளனர் — என்றும் அவர்கள் தெரிவித்ததாகச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-111)

## 60 கொலைகள் புரிந்த ஜே.வி.பி. தீவிரவாதி கைது!

கொழும்பு, அக். 20

ஜே. வி. பி. வன்செயல்கள் உச்சக் கட்டத்தில் இருந்த காலத்தில் சுமார் 60 கொலைகள் புரிந்தவரும், அதன் முக்கியஸ்தர்களில் ஒருவராக இயங்கியவர் என சந்தேகிக்கப்படுபவருமான ஒருவரை எம்பிலிப்பிட்டிய பொலீஸார் கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்தனர்.

ரவிமஹாத்மயா, பியசிறி முதலாளி பியல் மஹாத்மயா ஆகிய பல்வேறு பெயர்களுடன் எம்பிலிப்பிட்டிய, ஹீங்கமை, அம்பலாந்தோட்டை ஆகிய இடங்களில் இவர் நடமாடி வந்ததாகவும் — ஜே. வி. பி. முக்கியஸ்தராக இருந்த போது இவர் சுமார் 60 கொலைகளைப் புரிந்துள்ளதை பொலீஸாரிடம் அவர் ஒப்புக்கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஹீங்கம, அம்பலாந்தோட்டப் பகுதி ஜே. வி. பி. தலைவராகவும், அப்பகுதி ஆயுதக் களஞ்சியப் பொறுப்பாளராகவும் இருந்துள்ள மேற்படி நபர் — மாமடல்ல என்ற இடத்தில் கண்ணி வெடி ஒன்றை இயக்கியதாகவும் ஒப்புக் கொண்டார் என்று பொலீஸார் தெரிவித்தனர்.

## "ஹெல உறுமய" தலைவர் கட்சியிலிருந்து நிறுத்தம்

கொழும்பு, அக். 20

களுத்துறை மாவட்ட சுதந்திரக்கட்சி எம். பியும் ஹெல உறுமய தலைவருமான திலக் கருணாரத்னா கட்சியில் இருந்தும் கட்சி நடவடிக்கைகளிலிருந்தும் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

கட்சியின் அமைப்பு விதிகளை மீறி திரு. கருணாரத்னா செயற்படுகிறார் என்ற குற்றச்சாட்டின் மீது கட்சித் தலைவர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவினால் பிறப்பிக்கப்பட்ட இத்தடை உத்தரவு உடனடியாக அமுலுக்கு வந்திருப்பதாகக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. (த-எ)

### பம்பலப்பிட்டியில் 10 இலட்சம் கொள்ளை:

## ஜே. வி. பியுடன் தொடர்புடைய மூவர் பொலீஸாரால் கைது!

கொழும்பு, அக். 20

பம்பலப்பிட்டி லிபேர்ட்டி பிளாஸா கடைத் தொகுதியில் இடம்பெற்ற பத்து லட்சம் ரூபா கொள்ளைச் சம்பவம் தொடர்பாக ஜே.வி.பியுடன் தொடர்புடைய மூன்று நபர்களைப் பொலிஸார் கைது செய்துள்ளனர் என்று அறிவிக்கப்படுகின்றது.

இம் மூவரில் ஒருவர் கொள்ளையைத் திட்டமிட்டு நடத்தியதாகச் சந்தேகிக்கப்படும் [illegible] (த-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதவி உயர்வு பெற்று அதிக சம்பளம் பெறுவோருக்கும் விசேட படிகள்

யாழ்ப்பாணம், அக். 20

200 ரூபா விசேட படி, 300 விசேட படி ஆகியவற்றைப்பெற்ற அரசாங்க ஊழியர் ஒருவர், பதவி உயர்வு பெற்றதன் பேரில் முன்னரை விடக் கூடிய சம்பளம் பெற்றாலும் அந்த இரண்டு விசேட படிகளும் தொடர்ந்து அவருக்கு வழங்கப்படவேண்டும்.

300 ரூபா விசேட படி மாதாந்தம் 2,000 ரூபாவுக்கு குறைந்த சம்பளம் பெறுவோருக்கும், 200 ரூபா விசேட படி 3,000 ரூபாவுக்குக் குறைந்த சம்பளம் பெறுவோருக்கும் வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு பொதுநிர்வாக அமைச்சின் செயலாளர் கடந்த மாதம் 25 ஆம் திகதி வெளியிட்ட சுற்றுநிருபம் ஒன்றின் மூலம் அறிவித்துள்ளார். இது உள்ளூராட்சி ஊழியர்களுக்கும் பொருந்தும்.

அரச மற்றும் உள்ளூராட்சி ஊழியர்கள், 1989 ஆண்டின் 63 ஆம் இலக்கச் சுற்றுநிருபப்படி 200 ரூபா விசேட படியையும், 1990 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்கச் சுற்றுநிருபத்தின்படி 300 ரூபா விசேட படியையும் பெற்றுவருகிறார்கள்.

பதவி உயர்வு பெற்றதனை காரணம் காட்டி எவருக்காவது மேற்கூறிய விசேட படிகள் நிறுத்தப்பட்டிருந்தால் அவற்றை 1-12-1991 இல் இருந்து நடைமுறைக்கு வந்ததாகக் கருதி வழங்க வேண்டும் எனவும் பொதுநிர்வாக அமைச்சின் செயலாளர், ஏனைய அமைச்சுச் செயலாளர்கள், அரசாங்க அதிபர்கள், திணைக்கள தலைவர்கள், மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள் ஆகியோருக்கு அறிவித்துள்ளார். (அ-126)

## மரண அறிவித்தல்கள்

### வைத்தீஸ்வரக் குருக்கள் சாரதாம்பிகை அம்மா
(காரைநகர்)

பிரம்மஸ்ரீ வைத்தீஸ்வரக் குருக்களின்பாரியார் சாரதாம்பிகை அம்மா (அம்பிகை) 17-10-1992 சனிக்கிழமை காரைநகரில் சிவபதம் அடைந்தார். அன்னார் காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் தேவஸ்தான பிரதமகுரு பிரம்மஸ்ரீ மங்களேஸ்வரக்குருக்களின் மைத்துனியும் ஆனந்த சர்மா (கச்சேரி—மன்னார்), ராணி, சாவித்திரி (கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் காரைநகர், சாம்பலோடை மயானத்தில் நடைபெற்றன. இத் தகவலை உற்றார், உறவினர் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:
பிள்ளைகள்.
(ராணி, சாவித்திரி)

கற்பகப் பிள்ளையார் கோவிலடி,
திருபாலை. (22951)

### பத்மநாதன பத்மராஜன்
(யாழ். வைத்தீஸ்வர கல்லூரி பழைய மாணவன்)

புங்குடுதீவு ஏழாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், 687/28 A மானிப்பாய் வீதி ஓட்டுமடத்திலும் பின்னர் கொழும்பில் வசித்து வந்தவருமாகிய பத்மநாதன் பத்மராஜன் (நியூ சாரதா ரேடி சென்ரர் கொழும்பு - 11) 8-10-92 அன்று கொழும்பில் காலமானார்.

இவர் பத்மநாதன் - தனலெட்சுமியின் மூத்த மகனும், வசந்தகுமார் (உதயன் பணிமனை), மோகன்ராஜ் (யாழ். வைத்தீஸ்வர கல்லூரி ஆண்டு - 11), ரஞ்சித்குமார் (யாழ். வைத்தீஸ்வர கல்லூரி ஆண்டு - 7) ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் பூதவுடல் சின்ன பொரளைச் சந்தி, ஜெயரத்ன மலர்சாலையில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு கனத்தை இந்து மயானத்தில் 11-10-92 மாலை தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. பத்மநாதன்
(தந்தை)

687/28 A
மானிப்பாய் வீதி,
ஓட்டுமடம். (C/3602)

### சின்னையா தையலம்மை

கொட்டடியைப் பிறப்பிடமாகக் கொண்ட தையலம்மை 19-10-92 நேற்று காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற சின்னையாவின் மனைவியும், காலஞ்சென்றவர்களான சண்முகம், சின்னத்துரை ஆகியோரின் சகோதரியும், நடராசா, சிவபாக்கியம், மகேசுவரி, கேதீஸ்வரன், பரமசிவம், சிறிரங்கலட்சுமி, இரத்தினேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், பரமசாமி, லலிதாதேவி, சோமசுந்தரம், அருளம்பலம், மங்களராணி, புஸ்பராணி, தனேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 20-10-92 (இன்று) செவ்வாய்க்கிழமை பி. ப. 2 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சி. கேதீஸ்வரன் (மகன்)
ஆ. சி. பரமசாமி (மருமகன்)

28/2 ஆஸ்பத்திரி வீதி,
கொட்டடி,
யாழ்ப்பாணம். (22964)

### சண்முகப்பத்தர் நாராயணசுவாமி

கன்னாதிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், நாச்சிமார் கோவிலடியை வசிப்பிடமாகக் கொண்டவருமான யாழ். மாவட்ட நீதிமன்ற மொழிபெயர்ப்பாளரும், கன்னாதிட்டி காளிகோவில் முன்னாள் அறங்காவலரும், வேதம், சமஸ்கிருதம் அறிந்தவருமான சண்முகப்பத்தர் நாராயணசுவாமி காலமாகிவிட்டார்.

இவர் மகேஸ்வரியின் அன்புக் கணவரும், ஜெகன்மோகினி, வாசுகி, பவானி (லங்கா சிமெந்து லிமிட்டெட், கொழும்பு), சண்முகானந்தன் (ஜேர்மனி), திரிபுரசுந்தரி (டென்மார்க்), அசோகன் ஆகியோரின் தகப்பனாரும், லோகேஸ்வரன் (யாழ். மாவட்ட நீதிமன்றம்), ஜெயயோகன் (கட்டுநாயக்கா), கருணாகரன் (டென்மார்க்) ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்றவர்களான குப்புச்சாமி, சாம்பசிவம், முருகையா, கிருஸ்ணசாமி (திருமலை) மற்றும் பாலகிருஷ்ணன், நடராஜா, கமலம்மா (திருமலை), இராஜாம்பாள், மகேஸ்வரி, கமலா, மகாலெட்சுமி, கமலா ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்றவர்களான இராஜேந்திரம், தேவலட்சுமி மற்றும் லெட்சுமணன், கனகசுந்தரம், பத்மநாதன், சந்திரசேகரம் (லலிதா நகை மாளிகை) ஆகியோரின் மைத்துனரும், ஜெயராணியின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 637, கே. கே. எஸ். வீதியில் இருந்து தகனக்கிரியைகளுக்காக இன்று மாலை 3 மணிக்கு கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
லோகேஸ்வரன்

(22965)

## பிரிட்டிஷ் அமைச்சர் திரும்பினார்

கொழும்பு, அக். 20

நான்கு நாள் விஜயத்தை முடித்துக்கொண்டு பிரிட்டிஷ் துணை அமைச்சர் மார்க் லெனொக்ஸ் பொய்ட் நேற்று கொழும்பில் இருந்து லண்டன் திரும்பினார். வவுனியாவுக்கும் அவர் விஜயம் செய்திருந்தார்.

### வடக்கு...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இக்குப் பொறுப்பான தளபதியாகப் பணியாற்றி வந்த மேஜர் ஜெனரல் ஜெரி டி சில்வா இராணுவத் தலைமையகத்தில் இராணுவத் தலைமை அதிகாரியாக நியமிக்கப்பட்டிருக்கிறார். ஓய்வு பெறும் வரை அவர் இப்பதவியில் இருப்பார்.

யாழ். குடா நாட்டின் தளபதி பிரிகேடியர் தலுவத்த வடக்கிற்கான தளபதியாக நியமிக்கப்பட்டதை அடுத்து— யாழ் தளபதியாக பிரிகேடியர் கெமுனு குலதுங்க நியமிக்கப்பட்டிருக்கிறார்.

பிரிகேடியர் குலதுங்க இது வரை காலமும் ஆனையிறவுப் பகுதியில் நிலை கொண்டிருக்கும் 7 ஆவது பிரிகேட் அணிக்குப் பொறுப்பான அதிகாரியாகச் செயற்பட்டு வந்தார்.

கொழும்பில் இரு வாரகாலமாக நிலவி வந்த இழுபறியின் பின்னர் இந்த நியமனங்கள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்த புதிய நியமனங்கள் நேற்று முன்தினம் ஞாயிறு முதல் அமுலுக்கு வந்தன. (அ-3)

# மேஜர் முரளி நினைவு:
## இறுதிப் போட்டிகள் இன்று

மேஜர் முரளி நினைவாக யாழ். மாவட்டத்தில் நடத்தப்பட்ட விளையாட்டு விழாவின் இறுதிப் போட்டிகள் இன்று நடைபெறவிருக்கின்றன.

இன்று காலை 9 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மைதானத்தில் நடைபெறவிருக்கும் நிகழ்ச்சிகள் வருமாறு:-

★ வலைப்பந்து - மகாஜனா எதிர் உடுவில் மகளிர்

★ கயிறிழுத்தல் (பெண்கள்) - வல்வை மகளிர் எதிர் மகாஜனா

★ கயிறிழுத்தல் (ஆண்கள்) - சென். ஜோன்ஸ் எதிர் மெமோறியல்

இது தவிர 11, 13 வயது ஆண், பெண் பிரிவினர்களுக்கான 100 மீற்றர் ஓட்டம் இறுதிப் போட்டியும் அங்கு நடைபெறும்.

இன்று மாலை 4 மணிக்கு யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட மைதானத்தில் நடைபெறும். உதைபந்தாட்ட இறுதிப் போட்டியில் விக்னேஸ்வராக் கல்லூரியை எதிர்த்து நெல்லியடி ம. ம. வி. மோதும். (உ)

# ஓய்வு பெறுவோருக்கான
## திரட்டிய ஓய்வூதியம் இடை நிறுத்தப்பட்டது

யாழ்ப்பாணம், அக். 20

அரசாங்க சேவையில் இருந்து ஓய்வுபெறுவோருக்கு வழங்கப்படும் இளைப்பாற்றுப் பணிக்கொடை திரட்டிய ஓய்வூதியம் (Commuted Pension) வழங்குவது இடை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

நிதி நெருக்கடிகள் காரணமாக, கடந்த ஏப்ரல் மாதம் தொடக்கம் இந்தக் கொடுப்பனவுகள் இடை நிறுத்தப்பட்டிருப்பதாக கொழும்பு ஓய்வூதியத் திணைக்கள வட்டாரங்களிலிருந்து தெரியவந்துள்ளது.

இதன் பிரகாரம் திறைசேரியின் நிதி நிலைமை சீரடையும் வரை திரட்டிய ஓய்வூதியக் கொடுப்பனவுகள் வழங்கப்பட மாட்டா. இவ்வருடம் ஏப்ரல் மாதத்துக்குப் பின்னர் ஓய்வு பெற்ற அரச ஊழியர் இதனால் பெரிதும் பாதிப்படைவர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (அ-3)

## விமான விபத்து

கொழும்பு, அக். 20

இந்தோனேஷிய விமானமொன்று நேற்று முன்தினம் மேற்கு ஜாவாவிலுள்ள மலை ஒன்றில் மோதி நொருங்கி வீழ்ந்ததில் அதில் பயணம் செய்த 31 பேரும் கொல்லப்பட்டனர். (உ-10)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், அக். 20

மல்லாகம் ஸ்ரீ முருகன் ஐக்கிய விளையாட்டுக் கழகம் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடத்தும் 7 பேர் கொண்ட அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று இடம்பெறும் ஆட்டங்கள் வருமாறு:

★ காட்சி ஆட்டம்— பாடும் மீன் அணி எதிர் றோயல் விளையாட்டுக் கழக அணி.

★ அரை இறுதி ஆட்டம்— சென். மேரிஸ் "ஏ" அணி எதிர் யங் ஹென்றிசியன் அணி. (த)

## சீனி, ம. எண்ணெய் விநியோகம்

யாழ்ப்பாணம், அக். 20

ஊர்காவற்றுறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் தனது பாவனையாளர்களின் நிவாரண அட்டைகளுக்கு சீனி மற்றும் மண்ணெண்ணெய் விநியோகித்து வருகிறது.

சங்கத்தின் மக்கள் கடையில் இவ்வாரம் அட்டை ஒன்றுக்கு ஒரு கிலோ சீனியும்— ம. எண்ணெய்க் கிளையில் இன்று தொடக்கம் அட்டைக்கு இரண்டு லீற்றர் ம. எண்ணெயும் விநியோகிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## நாளை

வண்ணார்பண்ணை, அக். 20

யாழ். மாநகர சுகாதாரப் பகுதியினரும் பனம் பொருள் அபிவிருத்தி சபையினரும் இணைந்து, மாநகர எல்லைக்குள் வசிக்கும் வேலையற்றிருக்கும் யுவதிகளுக்கு என இலவச கைப்பணிப் பயிற்சி வகுப்பு ஒன்றை நாளை காலை 9 மணிக்கு யாழ். நாவலர் மண்டபத்தில் நடத்தவுள்ளனர். (உ-162)

★ ★ ★

வண்ணார்பண்ணை, அக். 20

சாவகச்சேரி தெங்கு பனம் பொருள் உற்பத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கிளை முகாமையாளருக்கான கருத்தரங்கு ஒன்று நாளை காலை 9. 30 மணிக்கு சாவகச்சேரி தெங்கு பனம் பொருள் உற்பத்திக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெறும். (உ-162)

### படை கட்டமைப்பு...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டெம்பர் மாதங்களில் இடம் பெற்ற நிகழ்வுகளை மீளாய்வு செய்து, அறிக்கை ஒன்றை அரசுக்குச் சமர்ப்பித்தது.

இராணுவக் கட்டளைப் பீடத்தை ஒருமுகப்படுத்தும்படி பாதுகாப்புச் சபையும் தீர்மானித்தது.

அதற்றின் அடிப்படையிலேயே முப்படைகளையும் பொலீஸையும் கூட்டுப்படைக் கட்டளைப் பீடத்தின் கீழ் மீண்டும் கொண்டுவரும் முடிவை அரசாங்கம் எடுத்தது என்றார் அவர். (உ-எ)

## அள்ளப்பட்ட ஆயுதங்கள்...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ★ சிவில் சப்பாத்து | — | 19 சோடி | ★ சமரா | — | 01 |
| ★ ஏ. கே. ஹோல்சர் | — | 20 | ★ இராணுவ சீருடை | — | 42 |
| ★ ஏ. கே. ஜக்கெட் ஹோல்சர் | — | 02 | ★ சாதாரண தொப்பி | — | 08 |
| ★ ரி - 81 பைனட் | — | 02 | ★ ஷோல்டர் பை | — | 19 |
| | | | ★ மழைக் கவசம் | — | 05 |

### மன்னார்...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அடுத்து சுமார் 25 நிமிட நேரம் கடும் சண்டை இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து இராணுவத்தினரின் நிலைகள் விடுதலைப் புலிகளிடம் வீழ்ச்சியடைந்தன என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த வெற்றிகரத் தாக்குதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் எதுவித இழப்பும் ஏற்படவில்லை என்றும் அறிவிக்கப்பட்டது. (உ-எ-3-10)

### மேலும் பல...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

புதிதாகத் திரட்டப்பட்டுள்ள படையினருக்குப் பயிற்சியும் ஆயுதங்களும் வழங்கப்பட்ட பின்னர், மேலும் கடு [illegible] பகுதிக்கு அனுப்பப்படும் என [illegible] தெரிவித்தன. (உ-எ-10)

## பொதுக்கூட்ட அறிவித்தல்

வேலணை தெங்கு பனம் பொருள்
உ. வி. கூ. சங்கம் (மட்டுப்படுத்தப்பட்டது)
(பதிவு இல. J. 1606 — 11-04-72)

காலம் :- 28-10-92 புதன்கிழமை
நேரம் :- 11-00 மு. பகல்
இடம் :- தீவக இடம்பெயர்ந்தோர் நலன் காக்கும் கழகம், அத்தியடி, யாழ்ப்பாணம்.
தலைமை :- திரு. மா. குணசிங்கம் அவர்கள்
நிகழ்வு :- அங்கத்தவர்கள் நலன்கள் பற்றி ஆராய்தல்.

அனைத்து அங்கத்தவர்களையும் தவறாது பங்குகொள்ளும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

கே. எஸ். செல்வராசா
செயலாளர்.
19-10-92
(22961)

இவ்வண்ணம்:
கூட்டுறவு சேவையிலுள்ள
மா. குணசிங்கம்
தலைவர்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம் [illegible] இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 20-10-92 இல் [illegible] வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org